# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 21 புதன்கிழமை 06.08.2025 கதிர் 277



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel




# செம்மணிப் புதைகுழி குறித்த விசாரணைக்கு அரசு எவ்வித இடையூறும் ஏற்படுத்தவில்லை!

## அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு



கொழும்பு, ஒக 06

"யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைகளுக்கு அரசு எவ்வித இடையூறும் ஏற்படுத்தவில்லை. மாறாக தேவையான ஒத்துழைப்புகளே வழங்கப்பட்டு வருகின்றன." - என்று சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"செம்மணி மனிதப் புதைகுழி தொடர் பான விசாரணைகள் நீதிமன்றக் கண்காணிப்புடன் இடம்பெற்று வருகின்றன. தேவையான வசதிகளை அரசு செய்து கொடுத்துள்ளது.

வடக்கில் தேசிய மக்கள் சக்திக்கே அதிக வாக்குகள் உள்ளன. நிச்சயம் நாம் நீதியை நிலைநாட்டுவோம்.

தெற்கில் இனவாதம் தோற்கடிக்கப்பட்டுள்ளது. எனினும், இதனை எப்படியாவது மீள ஏற்படுத்துவதற்கு ராஜபக்ஷக்கள் முற்படுகின்றனர்.

செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பான விசாரணைக்கு நாம் எவ்வித இடையூறும் ஏற்படுத்தவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரிடம் கூட ஒத்துழைப்பு கோரியுள்ளோம்." - என்றார்

## வெடிபொருட்களுடன் சிக்கிய வயோதிபர்!



இரத்தினபுரி, ஒக. 06

வெடிபொருட்களுடன் வயோதிபர் ஒருவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரத்தினபுரி,

7

## மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர்கள் இருவர் மரணம்!



அநுராதபுரம், ஒக. 06

மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அநுராதபுரம், கலென்பிந்துனுவெவ - யக்கல்ல பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று கலென்பிந்துனுவெவ

7

## கைதான சஷீந்திர ராஜபக்ஷவுக்கு 19 ஆம் திகதி வரை விளக்கமறியல்



கொழும்பு, ஒக. 06

இலஞ்சம் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிக்கும் ஆணைக்குழுவால் இன்று கைது செய்யப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷவை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

7

## துப்பாக்கிகளுடன் மூவர் கைது!



பொலனறுவை, ஒக. 06

பொலனறுவை, அரலகங்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கஜ/வத்த பகுதியில் மூன்று உள்நாட்டுத் துப்பாக்கிகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் .

அரலகங்வில பொலிஸாருக்கு நேற்று செவ்வாய்க்கிழமை கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலுக்கமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர்கள் மூவரும் கைது

7


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# பாடகர்கள் சங்கம் ஜனாதிபதியிடம் விடுத்துள்ள கோரிக்கை!

கொழும்பு, ஓக 06

ஒரு பாடலின் முழுமையான உரிமைகளை பாடகர்களுக்கும் வழங்கும்படி சட்டங்களைத் திருத்துமாறு பாடகர்கள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவிற்கும், இலங்கை பாடகர்கள் சங்கத்திற்கும் இடையிலான சந்திப்பு ஒன்று ஜனாதிபதி செயலகத்தில் நேற்று பிற்பகல் நடைபெற்றது. இந்த சந்திப்பின் போதே இலங்கை பாடகர்கள் சங்கத்தினர் ஜனாதிபதியிடம் கோரிக்கையை விடுத்தனர்.

இந்த கலந்துரையாடலின் போது,

ஒரு பாடலின் முழுமையான மற்றும் சட்டபூர்வ உரிமைகளை பாடலாசிரியருக்கு, இசையமைப்பாளர் களுக்கும்வழங்குவது போல் பாடகர்களுக்கும் வழங்க சட்டங்களைத் திருத்துமாறு பாடகர்கள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தது.

புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழ் ஒரு பாடலுக்கு முழுமையான உரிமையை பாடலாசிரியர் மற்றும் இசையமைப்பாளர் கொண்டிருப்பதால், பல பிரபல பாடகர்கள் நெருக்கடியில் உள்ளனர் என்றும் தங்களின் சமூக ஊடகங்களில் பாடல்களைப்பதிவேற்ற முடியாமல் இருப்பதாகவும் இங்கு வலியுறுத்தப்பட்டது. இதனால் தொழில்ரீதியாக இசைத்துறையில் ஈடுபட்டுள்ள பல ஆண் மற்றும் பெண் பாடகர்கள் அநீதிக்கு ஆளாகியுள்ளனர். இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் பரிசீலித்து தேவையான சட்டத் திருத்தங்களைச் செய்வதற்கு ஒரு சுயாதீனக் குழுவை நியமிக்குமாறு பாடகர்கள் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தது.

இதன்போது ஜனாதிபதி, குறித்த பிரச்சினை நீண்ட காலமாக இருந்து வருவதாகவும், எனவே இது தொடர்பில் ஆராய்ந்து தற்போதுள்ள சர்வதேச சட்டம் மற்றும் தொழில்நுட்பத் தேவைகளின் அடிப்படையில் சர்வதேச அளவில் நிறுவப்பட்டுள்ள மரபுகளை ஆராய்ந்தும், அனைத்து தரப்பினருக்கும் நியாயம் கிடைக்கும் வகையில் தீர்வுக்கான அணுகுமுறை எடுக்கப்பட வேண்டுமென சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# வைத்தியர்கள் நாடு தழுவிய வேலைநிறுத்தத்தில் ஈடுபட முடிவு!

கொழும்பு, ஓக 06

வைத்தியர்கள் நாடு தழுவிய வேலைநிறுத்தத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்தியர் ஹன்சமல் விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

வைத்தியர்களின் இடமாற்றங்களை அமுல்படுத்துதல் உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்தியர் ஹன்சமல் விஜேசூரிய தெரிவித்துள்ளதாவது,

இடமாற்றப் பட்டியல் பிரச்சினைகளில் சுகாதார அமைச்சு முறையாகத் தலையிடவில்லை என்றால் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழுவாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணக் கோரி நாடு தழுவிய வேலைநிறுத்தத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளோம்.

சுகாதார அமைச்சுக்கு நாங்கள் ஒரு காலக்கெடுவை வழங்கியுள்ளோம். நாங்கள் தொடர்ச்சியான கலந்துரையாடல்களில் ஈடுபட்டுள்ளோம்.

ஆனால் இந்த அதிகாரிகள் கண்மூடித்தனமாக இருக்கிறார்கள்.

எதிர்வரும் 11ஆம் திகதி காலை 8.00 மணிக்குள் இது தொடர்பாக சுகாதார அமைச்சு நேர்மறையான தலையீட்டைச் செய்யத் தயாராக இல்லை என்றால், அதன்படி நாடு தழுவிய வேலைநிறுத்தத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளோம்- என்று தெரிவித்துள்ளார்.

# அரசாங்கம் பழிவாங்கும் நோக்கில் செயல்படுகின்றது மஹிந்த ராஜபக்ஷ குற்றசாட்டு!

கொழும்பு, ஓக 06

தற்போதைய அரசாங்கம் பழிவாங்கும் நோக்கில் செயல்பட்டு வருவதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று பிற்பகல் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,

மக்கள் எங்களுக்கு வழங்கிய சலுகைகளை விட பெரியது எதுவும் இல்லை. அது எங்களிடம் இருக்கும் வரை, எந்தவொரு சலுகையையும் நீக்குவதால் எந்தப் பிரச்சினையும் இல்லை- என்றார்

கேள்வி – இது நடந்தால், நீங்கள் விஜேராமவை விட்டு வெளியேறி மெதமுலனவுக்குச் செல்ல வேண்டுமா?

பதில் – மெதமுலன விஜேராமவை விட மிகச் சிறந்தது.

கேள்வி – உங்கள் கருத்துப்படி, அரசாங்கம் எந்த நோக்கத்திற்காக இதுபோன்ற செயலைச் செய்கிறது?

பழிவாங்க... என்று தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# சஷீந்திர ராஜபக்ஷ கைது செய்யப்பட்டது ஏன்?



கொழும்பு, ஓக 06

இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான சொத்தை ஊழல் மற்றும் துஷ்பிரயோகம் செய்தமை குறித்த விசாரணை தொடர்பாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ இன்று கைது செய்யப்பட்டதாக இலஞ்சம் மற்றும் ஊழல் சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் கூற்றுப்படி, செவனகலவில் உள்ள கிரிப்பன்வெவ நீர்த்தேக்கத்திற்கு அருகில் அமைந்துள்ள இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமான நிலத்தில் சட்டவிரோதமாக பண்ணை கட்டிடம் கட்டியதாக சஷீந்திர ராஜபக்ஷ மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

மே 09, 2022 அன்று ‘அரகலய’ பொதுப் போராட்டத்தின்போது இந்தக்கட்டிடம் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்தக் காணி இலங்கை மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தமானது என்பது பின்னர் உறுதிப்படுத்தப்பட்டது.

இருந்தபோதும், கட்டிடத்தின் புனரமைப்புக்கான ஒப்புதலைப் பெறுவதற்காக, தனது அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ராஜபக்ச அழுத்தம் கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

இந்த நடவடிக்கைகள் ஊழல், சதித்திட்டம் மற்றும் அரசு சொத்துக்களை சட்டவிரோதமாக ஆக்கிரமித்தல் ஆகிய குற்றச்சாட்டுகளை உள்ளடக்கியதாக ஆணைக்குழு கூறுகிறது.

1999 ஆம் ஆண்டு சட்டம் இலக்கம் 28 இன் படி, திருத்தப்பட்ட 1982 ஆம் ஆண்டு சட்டம் இல 12 இன் பிரிவு 5(1) இன் கீழ், அரச சொத்துக்களை தவறாகப் பயன்படுத்துவது தொடர்பான குற்றங்களை நிவர்த்தி செய்யும் குற்றச்சாட்டின் பேரில் சஷீந்திர ராஜபக்ஷ கைது செய்யப்பட்டார்.

அவர் கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட உள்ளார். (ஜ)

# மன்னாருக்கு வந்தடைந்த காற்றாலை மின் கோபுரங்களின் பாகங்கள்



மன்னார், ஓக 06

மன்னார்-மதவாச்சி பிரதான வீதி,முருங்கன் பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காற்றாலை மின் கோபுர பாகங்களுடன் காணப்பட்ட பாரிய வாகனங்கள் புதன்கிழமை) அதிகாலை 2.30 மணியளவில் மக்களின் பாரிய எதிர்ப்புகளுக்கு மத்தியில் பொலிஸாரின் பாதுகாப்புடன் மன்னார் நகரை வந்தடைந்துள்ளது.

குறித்த காற்றாலை மின் கோபுரங்களுக்கு பாகங்களை மன்னார் நகருக்குள் எடுத்து வரக்கூடாது என்ற கோரிக்கையை முன் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை (3) அன்று இரவு மன்னார் தள்ளாடி சந்தியில் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். அதனைத்தொடர்ந்து திங்கட் கிழமை மற்றும் செவ்வாய்க்கிழமை ஆகிய தினங்களில் மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்து வந்த நிலையில் செவ்வாய்க்கிழமை அன்று காலை மன்னார் பஜார் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களை மூடி மன்னாரில் முன்னெடுக்கப்படவுள்ள 2 ஆம் கட்ட காற்றாலை மின் உற்பத்தி வேலைத்திட்டம் மற்றும்,மன்னார் நகருக்குள் கொண்டு வரப்படவுள்ள காற்றாலை மின் கோபுரங்களை கொண்டு வர வேண்டாம் என்ற கோரிக்கையை முன் வைத்து போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் அங்கிருந்து சென்ற நிலையில் சிறிய அளவிலான மக்களே குறித்த பகுதியில் நின்ற நிலையில் பொலிஸார் அவ்விடத்தில் நின்றவர்களை அச்சுறுத்தி பலத்த பாதுகாப்புடன் மன்னாரை நோக்கி குறித்த வாகனம் சென்றுள்ளது. (ஜ)

# பிறப்பு வீழ்ச்சியால் 1ஆம் தரம் கடுமையாக சரிந்தது

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு 360,000 ஆக இருந்த 1 ஆம் தரத்துக்கான மாணவர்களின் எண்ணிக்கை தற்போது 298,000 ஆகக் குறைந்துள்ளமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

பிறப்பில் ஏற்பட்ட குறைவு இதை முக்கியமாகப் பாதித்துள்ளது, மேலும் கணிப்பின்படி, இந்த எண்ணிக்கை 2030 ஆம் ஆண்டுக்குள் 196,209 ஆக இருக்கலாம் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்தில், செவ்வாய்க்கிழமை (05) புதிய ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள்விக்கு, கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் டாக்டர் மதுர செனவிரத்ன அளித்த பதிலிலேயே மேற்கண்ட விடயம் அம்பலமாகியுள்ளது.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அரசாங்க பாடசாலைகளில் 1 ஆம் வகுப்பில் மாணவர்களின் எண்ணிக்கை 360,000 ஆக இருந்தது, தற்போது அந்த எண்ணிக்கை 298,000 ஆகக் குறைந்துள்ளது, இது ஓர் ஆபத்தான குறைவு என்று புதிய ஜனநாயக முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

அடுத்த 05 ஆண்டுகளுக்கான கணிப்பின்படி, 2030 ஆம் ஆண்டுக்குள் அரசாங்க பாடசாலைகளில் தரம் 01 இல் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 196,209 ஆக இருக்கலாம், மேலும் இது முக்கியமாக பிறப்பு எண்ணிக்கையில் ஏற்பட்ட குறைவால் ஏற்படுகிறது என்று கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் டாக்டர் மதுர செனவிரத்ன பதிலளித்தார்.

கடந்த 05 ஆண்டுகளில் அரசாங்க பாடசாலைகளில் தரம் 01 இல் சேர்க்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை தொடர்பில், கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் டாக்டர் மதுர செனவிரத்ன தெளிவுப்படுத்துகையில்,

2023 இல் 298,959 ஆகவும்,
2022 இல் 303,868 ஆகவும்,
2021 இல் 315,363 ஆகவும்
2020 இல் 330,571 ஆகவும் அடுத்த 5 ஆண்டுகளில் அரசாங்க பாடசாலைகளில் தரம் 01 இல் சேரும் மாணவர்களின் எண்ணிக்கைக்கான கணிப்பின்படி,

2030 இல் 196,209 ஆகவும்,
2029 இல் 218,347 ஆகவும்,
2028 இல் 244,545 ஆகவும்,
2027 இல் 257,443 ஆகவும், 2026 இல் 265,738 ஆகவும் சேர்க்கப்படுவார்கள்.

புதிய ஜனநாயக முன்னணி பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு 360,000 ஆக இருந்த மாணவர்களின் எண்ணிக்கை இன்று 298,000 ஆகக் குறைந்துள்ளது. ஆபத்தான குறைவு ஏற்பட்டுள்ளது. இதை சரிசெய்வதற்கான பயணத்தை எவ்வாறு தொடங்குவது?

இதற்கு கல்வி மற்றும் உயர்கல்வி துணை அமைச்சர் டாக்டர் மதுரா செனவிரத்ன பதிலளிக்கையில், சுமார் 5 ஆண்டுகளாக நாங்கள் முன்னறிவிப்பைச் செய்தபோது, நாங்கள் கணக்கில் எடுத்துக் கொண்ட விஷயங்களில் ஒன்று பிறப்பு சதவீதத்தில் சரிவு உள்ளது. அனைத்து குழந்தைகளும் 13 ஆண்டுகள் பாடசாலை கல்வியை முடிக்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம் என்றார். (ஜ)









# உலக பழங்குடிகள் தின நிகழ்வு

கொழும்பு, ஓக 06

உலக பழங்குடிகள் தின நிகழ்வு மூதூர் சந்தன வெட்டை கிராமத்தில் செவ்வாய்க்கிழமை அன்று இடம் பெற்றது. திருகோணமலை குவேனி பழங்குடி மக்கள் நலன்புரி அமைப்பு ,சிவில் அமையம் ஆகியன இணைந்து இதனை ஏற்பாடு செய்திருந்தன.

“இலங்கையின் கரையோர பழங்குடி மக்களின் உரிமைகளை நிலை நாட்ட ஒன்றிணைவோம் “ எனும் தொனிப்பொருளில் கீழ் இந்த நிகழ்வு இடம் பெற்றது.

நிகழ்வில் பழங்குடி சமூக பாரம் பரிய பூஜை இடம்பெற்றன. அத்தோடு பழங்குடி சமூகத்திலிருந்து பல்கலைக்கழகம் தெரிவு செய்யப்பட்ட 20 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் காட்டுக்கு தேன் எடுக்க செல்வோருக்கு அரச அனுமதியுடன் அடையாள அட்டையும் இதன் போது வழங்கி வைக்கப்பட்டன. அதே வேளை தேன்,குளத்து மீன் கருவாடு, பழங்குடியினர் உணவான வள்ளிக்கிழங்கு, அல்லைக்கிழங்கு என்பன நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினருக்கு சிற்றுண்டி உணவாக பகிரப்பட்டது.

நிகழ்வில் மட்டக்களப்பு பழங்குடி அமைப்பின் தலைவர் நல்லதம்பி வேலாயுதம் ,திருகோணமலை குவேனி பழங்குடி அமைப்பின் தலைவர் நடராசாகனகரெட்ணம் ,கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் சி.ஜெய்சங்கர்,திருகோணமலை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் சோ.லதா மங்கேஷ், மூதூர் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி தாமரை மனாலன் லலிதா தேவி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் கைதானவர்களின் குண்டர் சட்ட நடவடிக்கைகளை ரத்து செய்து ஐகோர்ட் உத்தரவு



பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில தலைவராக இருந்தவர் ஆம்ஸ்ட்ராங். இவர் கடந்த ஆண்டு ஜுலை 5-ம் தேதி தனது வீட்டின் அருகே வெட்டிக் கொல்லப்பட்டார். இந்த வழக்கில் இதுவரை 27 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 26 பேர் குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குண்டர் சட்டத்தை ரத்து செய்யக்கோரி நாகேந்திரன் உள்ளிட்ட 17 பேர் சென்னை ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்தனர். இந்த மனுக்கள் மீதான விசாரணை நீதிபதிகள் எம்.எஸ்.ரமேஷ், வி.லட்சுமி நாராயணன் அமர்வில் நடைபெற்று வந்தது. அப்போது காவல்துறை தரப்பில், சட்டம் ஒழுங்கு மற்றும் பொது அமைதியை கருத்தில்கொண்டே 26 பேரும் குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டதாக தெரிவித்தனர்.

மனுதாரர்கள் தரப்பில் அஜரான தாங்கள் கைது செய்யப்பட்டதற்கும், குண்டர் சட்டத்தில் அடைப்பதாக உத்தரவு பிறப்பிக்கப்பட்டதற்கும் இடையேயான கால தாமதத்தை கருத்தில் கொண்டு குண்டர் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமென கோரிக்கை வைத்தனர். மேலும், இயந்திர தனமாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதிகள், ஓராண்டாக வழக்கில் எந்த முன்னேற்றமும் இல்லை என கூறி 17 பேர் மீதான குண்டர் சட்டத்தை ரத்து செய்து உத்தரவிட்டனர்.

அதே சமயத்தில், இவர்களின் குண்டர் சட்டம் ரத்து செய்யப்பட்டுவிட்ட காரணத்தினால் மட்டுமே இவர்களுக்கு ஜாமீன் வழங்கி விட கூடாது என்றும், வழக்கின் தீவிரத்தை முழுமையாக கருத்தில் கொண்டே ஜாமீன் மனுக்கள் மீது முடிவெடுக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர். (ஐ)

## தமிழகத்தில் இருந்து கடத்திய ரூ.2 கோடி கஞ்சா பறிமுதல்



தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு கடத்திச் சென்ற ரூ.2 கோடி மதிப்பிலான கேரளா கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டது.தமிழக கடல் வழியாக இலங்கைக்கு தொடர்ந்து கடத்தல் சம்பவங்கள் நடந்து வருவதால், இலங்கை கடற்படையினர் கண்காணிப்பு மற்றும் சோதனை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி உள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் மாவட்டம் ஆழியவளை கடற்கரையில் வழக்கமான ரோந்து பணியில் இருந்த இலங்கை கடற்படையினர், அப்பகுதியில் பதுக்கி வைத்திருந்த இரண்டு சாக்கு பைகளை சோதனை செய்தனர்.

அதில் 30 பார்சலில் இருந்த 103 கிலோ கேரள மாநிலத்தில் இருந்து கடத்தப்பட்ட கஞ்சாவை இலங்கை கடற்படையினர் கைப்பற்றினர். கடத்தல்காரர்கள் குறித்த விசாரிக்க கைப்பற்றப்பட்ட கஞ்சாவை மரதன்கேணி போலீசாரிடம் ஒப்படைத்தனர். பறிமுதல் செய்யப்பட்ட கேரளா கஞ்சாவின் சர்வதேச மதிப்பு ரூ.2 கோடியாகும். (ஐ)

## வெட்டிக் கொல்லப்பட்ட எஸ்.ஐ. குடும்பத்தினருக்கு ரூ.1 கோடி நிவாரணம்: மு.க.ஸ்டாலின் அறிவிப்பு



உடுமலை அருகே அதிமுக எம்.எல்.ஏ. தோட்டத்தில் கொல்லப்பட்ட எஸ்.ஐ. குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் ரூ.1 கோடி நிவாரணம் அறிவித்துள்ளார். சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகவேல் உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும், அவரது குடும்பத்துக்கும் பேரிழப்பு என முதல்வர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் வெளியிட்டுள்ள அறிக்கையில்:

திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணிப்புரிந்துவந்த சண்முகவேல் (வயது 57) மற்றும் ஆயுதப்படைக் காவலர் அழகுராஜா ஆகிய இருவரும் நேற்று (05.08.2025) இரவு 11.00 மணியளவில் ரோந்துப் பணியின்போது சிக்கனூத்து அருகில் தனியரின் தோட்டத்து சாலையில் நடந்த அடிதடி பிரச்சனை குறித்து தகவல் அறிந்ததும் விசாரிக்க சம்பவ இடத்திற்குச் சென்றபோது அடிதடி பிரச்சனையில் ஈடுபட்டிருந்த மூவர் சிறப்பு உதவி ஆய்வாளர் மற்றும் ஆயுதப்படை காவலர் ஆகிய இருவரையும் துரத்திச் சென்று அரிவாளால் வெட்டியதில் சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகவேல் என்பவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்சியும், வேதனையுமடைந்தேன்.

சிறப்பு உதவி ஆய்வாளர் சண்முகவேல் உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இந்தக் கொடூரச் செயலில் ஈடுபட்ட குற்றவாளிகளை விரைந்து கைதுசெய்ய காவல்துறையினருக்கு உத்தரவிட்டுள்ளேன். சண்முகவேல்-ஐ இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு ரூ.1 கோடி நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன் என கூறப்பட்டுள்ளது.

உதவி ஆய்வாளரை வெட்டிக் கொன்றவர்களை பிடிக்க 6 தனிப்படைகள் அமைக்கப்பட்டு கொலையாளிகளை போலீசார் தீவிரமாக தேடி வருகின்றனர். கொலை நிகழ்ந்த இடத்தில் ஐ.ஜி. செந்தில்குமார் ஆய்வு செய்துவருகிறார். (ஐ)

## பிரதமர் மோடி-அதிபர் மார்கோஸ் சந்திப்பு இந்தியா-பிலிப்பைன்ஸ் இடையே 9 ஒப்பந்தங்கள் கையெழுத்தானது: நேரடி விமான சேவை தொடங்கவும் ஒப்புதல்



இந்தியா, பிலிப்பைன்ஸ் இடையேயான தூதரக உறவு 75 ஆண்டுகள் நிறைவை கொண்டாடும் விதமாக பிலிப்பைன்ஸ் அதிபர் பெர்டினாண்ட் மார்கோஸ் 5 நாள் அரசு முறை பயணமாக டெல்லி வந்துள்ளார். ஜனாதிபதி மாளிகைக்கு நேற்று வந்த அவருக்கு சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. ஜனாதிபதி முர்மு, பிரதமர் மோடி இருவரும் அதிபர் மார்கோசை வரவேற்றனர். இதைத் தொடர்ந்து, பிரதமர் மோடி-அதிபர் மார்கோஸ் தலைமையில் இருதரப்பு பேச்சுவார்த்தை நடந்தது.

இதில், பஹல்காம் தீவிரவாத தாக்குதலை கண்டித்தும், தீவிரவாதத்திற்கு எதிரான போராட்டத்தில் இந்தியாவுடன் நின்றதற்காகவும் அதிபர் மார்கோசுக்கு பிரதமர் மோடி நன்றி கூறினார். மேலும், இந்திய சுற்றுலா பயணிகளுக்கு விசா இல்லாத வருகை சலுகையை பிலிப்பைன்ஸ் சமீபத்தில் வழங்கிய நிலையில், பிலிப்பைன்ஸ் சுற்றுலா பயணிகளுக்கும் இந்தியாவில் விசா இல்லா வருகை சலுகை வழங்க முடிவு செய்யப்பட்டது. மேலும், டெல்லி-மணிலா இடையே நேரடி விமான சேவையை தொடங்கவும் இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர்.

இரு நாட்டு தலைவர்கள் இடையேயான சந்திப்பில், இருதரப்பு உறவை மூலோபாய கூட்டாண்மை கட்டத்திற்கு உயர்த்துதல் இரு நாடுகளின் படைகள், விமானப்படைகள் மற்றும் கடற்படைகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தை நடத்துவதற்கான விதிகளை வரையறுத்தல் மற்றும் விண்வெளியை அமைதியான முறையில் பயன்படுத்துவதற்கான ஒத்துழைப்பு உள்ளிட்ட 9 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

இது குறித்து பிரதமர் மோடி பேசுகையில், "இந்தியாவின் கிழக்கு நோக்கிய கொள்கை மற்றும் மகாசாகர் தொலைநோக்குப் பார்வையில் பிலிப்பைன்ஸ் முக்கிய பங்காளி. இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பு, செழிப்பு மற்றும் விதிகள் சார்ந்த ஒழுங்குக்கு நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். சர்வதேச சட்டங்களின்படி கடல் வழி கண்காணிப்பை நாங்கள் ஆதரிக்கிறோம். எங்கள் இருதரப்பு உறவை மூலோபாய கூட்டாண்மை நிலைக்கு உயர்த்த முடிவு செய்துள்ளோம்.

இதற்கான விரிவான செயல் திட்டமும் வகுக்கப்பட்டுள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான மேம்பட்ட பாதுகாப்பு உறவுகள் ஆழமான பரஸ்பர நம்பிக்கையின் அடையாளமாகும்" என்றார். தூதரக உறவின் 75ம் ஆண்டின் நிறைவை கொண்டாடும் வகையில் இரு தலைவர்களும் சிறப்பு தபால் தலையை வெளியிட்டனர். இதையடுத்து, டெல்லி-மணிலா இடையேயான நேரடி விமானப் போக்குவரத்து வரும் அக்டோபரில் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. (ஐ)

மாலைக்கதிர்
Maalaikkathir



# பாலினம் என்பது நிறமாலை!



பாலினம் என்பது இருநிலையானது அல்ல (ளேழெ டீலையெசல). அது ஒரு நிறமாலை போல (ளுிநஉவசரஅ) பாலின அலைக்கற்றை. ஒரு நிலைக்கும் இன்னொரு நிலைக்கும் கோடு போட்ட வித்தியாசம் கிடையாது. ஒன்று தேய்ந்து இன்னொன்றாகலாம், அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நிறங்களின் சந்திப்பிலும் ஒருவர் இருக்கலாம். இதைக் கண்டறிய ஒருவருக்கு ஓர் ஆயுள்கூடப் பிடிக்கலாம். அதனால்தான் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள்கூடத் தங்களை வெளிப்படுத்திக்கொள்வது நடக்கிறது. இதைக் கண்டறியும் நிகழ்வில் ஒன்றுக்கு மேற்பட்ட முறை தன் பாலினத்தையோ, பாலின ஈர்ப்பையோ மாற்றிக்கொள்வதும் நடக்கலாம். நாம் இன்னும்திருஃ திருமதி தாண்டி யோசிப்பதையே வாழ்நாள் சாதனையாகக் கருதிக்கொண்டிருக்கிறோம். உடற்கூறு ரீதியாகத்தான் இருபாலரில் ஒருவரல்ல என்பதை நிரூபித்துவிட்ட திருநருக்கே இன்னும் நாம் வேலை வாய்ப்பில் சமநிலை, அந்தஸ்து அளித்துவிடவில்லை. இதில் பாதியில் மாறும் பாலினமா? பாதியில் உணரும் பாலின ஈர்ப்பா என்று தலை சுற்றுகிறதல்லவா?

நீங்கள் பெரும்பான்மை பாலினத்தைச் சேர்ந்தவராக இருக்கலாம். அந்தப் பாலினத்து அடையாளத்தையே மாற்றி, அதாவது ஆணை பெண்ணாகவோ, பெண்ணை ஆணாகவோ மாற்றி உங்களை அழைத்தால் எவ்வளவு மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள்? காலமெல்லாம் இப்படி மாற்றி அடையாளப்படுத்தப்படுவது பெரும்பான்மை அல்லாத பாலினத்தவருக்கு எவ்வளவு மனச்சோர்வை அளிக்கும்? வெளிப்புற அடையாளமான பெயர் மாற்றிக் கூப்பிடுவதைத் தாங்கிக்கொள்ள முடியாதவர்கள், அடுத்தவரின் அடிப்படையான உள்ளார்ந்த அடையாளத்தை அளிக்க மறுப்பது எவ்வளவு குரூரமானது? அழைத்தல் மற்றும் அடைமொழி (வவைடந) இவற்றுக்காகத்தான் பாலினம் அறிந்துகொள்வதே. பாலின ஈர்ப்பு பற்றி, உங்களுக்கு அந்த நபர் மேல் பாலின ஈர்ப்பு இருந்தாலன்றி, அவ்வித ஈர்ப்பை வெளிப்படுத்தி உறவுக்கான அவரது சம்மதம் பெறவேண்டி இருந்தாலன்றி அதைத் தெரிந்துகொள்வது உங்கள் வேலையே அல்ல.

அப்படியென்றால் ஒருவர் என்ன பாலினம் என்று எப்படிக் கேட்பது?

உங்கள் பெயர் என்ன என்று எப்படிக் கேட்போமோ அப்படித்தான்! ஆமாம். அப்படியேதான்! எப்படிக் கேட்பது என்று நீங்கள் சங்கடப்பட, எப்படிச் சொல்வது என்று அவர்கள் சங்கடப்பட, அட, இதென்ன 80களின் காதல் கதையா? அரசும் தனியார் நிறுவனங்களும்தாம் இதற்கு வழி செய்யவேண்டும்.

ஒருவர் தான் எவ்வாறு அழைக்கப்பட விரும்புகிறார் என்று கேட்பதை சாதாரண விஷயமாகப் பார்க்க வேண்டும். ஏற்கெனவே பன்னாட்டு நிறுவனங்கள் இந்த வேலையை ஆரம்பித்துவிட்டன. நிறுவனத்தில் இருப்பவர்களின் பெயர் பட்டியலோடு அவரின் அடைமொழி, என்னவென்று அழைக்கப்பட விரும்புகிறார் என்பதையும் கேட்க ஆரம்பித்துவிட்டன.
ஆஒ, ஆ,ீச, ஆளைஉ, ஆளச, ஆசந போன்ற அடைமொழிகளுடன் மேற்கத்திய நாடுகள் வலம்வர ஆரம்பித்தாகிவிட்டது. மேற்கத்திய கலாசாரம் வேண்டாமெனில், இந்தியர்கள் வுசஃவுஅவ தவிர வுஒ போன்ற ஒன்றை கண்டுபிடிக்கவேண்டும், இந்தியர்கள் தாங்கள் பெரிதும் விரும்பும் சுயசார்பு பயன்பாட்டிற்கு.

ஒருவர் தனது பெயருடனோ தான் வழக்கமாக அலுவலக மெயிலில் இடும் வழக்கமான கையெழுத்துப் பகுதியிலோ, தன்னை எவ்வாறு குறிப்படப்படவேண்டும் என்பதையும் குறிப்பிடுகிறார். உதாரணமாக, பெண்ணாக அடையாளப்படுத்தப்படவேண்டுமென விரும்பினால் ளுhைஉநசநடல, அவரது பெயர் ளுாநஃஉநச ஆணாக அடையாளப்படுத்தப்படவேண்டுமென விரும்பினால் ளுஉைஉநசநடல, அவரது பெயர் உநஃஉைஅ, இருநிலையிலும் அடையாளப்படுத்தப்பட வேண்டாமென விரும்பினால்என்ன செய்வது? ஆங்கிலத்தில் வுாசைனிநசளழெ ளுஉைபெரடயசஇல் மீதம் இருப்பது ஐவ என்கிற அஃறிணைதான். மொழியின் போதாமைக்கு அஃறிணையாக முடியுமா? காலங்காலமாக ஆறாத இரத்தம் வடியும் புண் அல்லவா அது?

மிச்சம் இருப்பது வுாசைனீநசளழெீடரசயட இல்



வுாநலஃ வுாநஅ என்கிற பதம். ஆங்கில மொழியின் போதாமையை மீறி வுாநல என்கிற பதத்தை இப்போது வுாசைன ிநசளழெ ளுஉைபெரடயச இல் பயன்படுத்த தொடங்கியுள்ளார்கள் இந்த இருநிலை சாராத பாலினத்தார்.

கீழ்க்கண்டவாறு அதைக் காணலாம்.

**Sincerely**
அவரது பெயர்
**They/Them**



ஆனால் தமிழில் இந்தப் போதாமை இல்லை. படர்க்கையில் உயர்திணையாக அவர்ஃஅவருக்கு என்ற பதம் பயன்படுத்தப்படலாம். இவ்வாறு பயன்படுத்துவதன் மூலம் ஒருவரது பாலினம், அவர் எவ்வாறு அடையாளப்படுத்தப்பட விரும்புகிறார் என்பது தெரியவரும்.

நமது சமூகத்தில் பெண்களை உற்றுப் பார்ப்பதையும் பெண்வடிவில் உள்ள திருநங்கைகளை உற்றுப் பார்ப்பதையும் அசாத்தியமாகச் செய்பவர்கள், திருநம்பிகளை மட்டும் எளிதாக அடையாளம் கண்டுகொள்வதில்லை எனக் கவனித்திருக்கிறீர்களா?

ஏனெனில், பெண்களையும் திருநங்கைகளையும் உற்றுப் பார்ப்பதன் மூலம் அவர்களுக்கு ஏற்படும் மன நெருக்கடியை அலட்சியப்படுத்தும் இச்சமூகம், ஆண் வடிவில் இருப்பது திருநம்பி எனச் சந்தேகத்திற்கு இடமின்றி தெரியும்வரை, நமுட்டுச்சிரிப்பு சிரித்தால்கூட அதனால் ஓர் ஆண் மனநெருக்கடிக்கு ஆளாகிவிடுவானோ என்று பரிதவித்து பாவப்படுகிறது. தன்னையும் அறியாமல்கூட ஆணுக்கு அத்தகைய நெருக்கடி அளிப்பதில்லை. அதனால்தான் திருநம்பிகள் பெரும்பாலும் உற்று நோக்கப்பட்டு ஆராயப்படுவதில்லை, அவர்கள் திருநம்பிகள் என்று உறுதியாகத் தெரியும்வரை. தெரிந்தபின் அதே கதைதான்.

ஹிந்தியில் சண்டிகர் கரெ ஆஷிகி என்கிற படம் வந்தது. நாயகன், தன் காதல் இணையராகத் தேர்ந்தெடுத்தது பெண் என்று நினைத்த ஒரு திருநங்கையை. அதன்பின் நான் உன்னைத்தான் காதலிக்கிறேன். நீ யாராக இருந்தாலும் காதலிப்பேன் என்ற முடிவு எடுப்பார். அது நன்று, அதுவும் நடக்கலாம் எனினும், வெளிப்படையாகப் பாலினம் தெரியும் சூழலில்தான் ஆரம்பத்திலேயே சுதந்திரமாக ஒருவர் முடிவு எடுக்க இயலும். அது பல நடைமுறை சிக்கல்களை மனச்சோர்வுகளைத் தவிர்க்கும். தான் இன்னார் என்பது மரியாதைக்குரிய பொதுத்தகவல் என்பதே பெரிய பலம்.

பாலியல் ஈர்ப்பிலிருந்து ஏன் இப்போது பாலின அடையாளத்திற்கு வந்தோமெனில், தான் ஆண் என்ற பாலின அடையாளத்தை, இதர பாலினங்களை விளிம்புநிலைக்குத் தள்ளிவிடுவதற்கான லைசென்ஸ் என்று ஆண்களில் ஒரு சாரார் எடுத்துக்கொள்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ளத்தான். இதுதான் நச்சாண்மை என்பது (வுழஒஉை அயளஉரடைவைல). பாலியல் குற்றங்களுக்கான ஆரம்பப்புள்ளி இதில்தான் உள்ளது. பாலின அடையாளங்களையும் பாலின ஈர்ப்பையும் ஆண்களிடமிருந்தும், ஆண்கள் அதிகாரம் செலுத்தும் சமூகத்திடமிருந்தும் மறைப்பதன் மூலம் ஆணை வேட்டைக்காரனைப்போல பாவிக்க விட்டுவிடுகிறோம்.

இதர பாலினங்களை அவமரியாதை செய்யும் போக்கு கொண்ட நச்சாண்மை கொண்ட ஆண்கள் ஒரு பக்கத்திலும், அவர்களால் ஒடுக்கப்படும் பெண்கள், குழந்தைகள், இதர பாலின விளிம்புநிலை மக்கள், இந்த மாதிரி நச்சாண்மை ஆண்களால் பாதிக்கப்படும் சக ஆண்கள் என்று இன்னொரு பக்கமும் நின்றால் இந்த நச்சாண்மை நிறைந்த ஆண்கள்தாம் சிறுபான்மையினர். இதை உணர்ந்தாலே பாலின சமத்துவத்திற்கான பாதி வேலை ஆயிற்று.

அலுவலகங்களில் தொடர்ந்த வருடாந்திர வேலைக்கான பயிற்சிகளில் பாலினம் குறித்த விழிப்புணர்வின் மூலம் நிறையவே சாதிக்க முடியும். மீறும் நிகழ்வுகள் பாலியல் குற்றங்கள்தாம். பெண்களுக்கே பாலியல் குற்றங்களில் முழுத்தீர்வு கிடைப்பதில்லை, இதெல்லாம் ஆகிற வேலையா என்று சிலர் சொல்லக் கேட்கிறோம். பெண்களுக்கு முழுநீதி கொடுத்து முடிக்கும் வரையெல்லாம் காத்திருக்க முடியாது. பாலின விளிம்புநிலையாளர்களையும் உடனடியாக அதில் சேர்க்க வேண்டும். சமத்துவமும் நீதியும் உடனடியானதும் முழுமையானதுமே ஆகும். அரைகுறை கோரிக்கைகள் எப்போதும் வேலைக்காகாது.

# அமெரிக்காவிற்கு சுற்றுலா வர ரூ.13.16 லட்சம் உத்தரவாத தொகை: வெளிநாட்டினரிடம் வசூலிக்க டிரம்ப் நிர்வாகம் அதிரடி முடிவு



அமெரிக்க அதிபர் டிரம்ப் இரண்டாவது முறையாக பொறுப்பேற்றதில் இருந்து அதிரடியாக பல்வேறு புதிய திட்டங்களையும், புதிய விதிகள், புதிய கட்டுப்பாடுகளையும் விதித்து வருகின்றார். இந்நிலையில் அமெரிக்க வெளியுறவுத் துறை விசா வழங்குவதில் புதிய திட்டத்தை சோதனை முறையில் அமல்படுத்தி உள்ளது.

இதன்படி, வணிகம் மற்றும் சுற்றுலாவிற்காக அமெரிக்காவிற்குள் வருவதற்கு பி-1. பி%2 விசாக்களுக்கு விண்ணப்பிக்கும் வெளிநாட்டு நபர்கள் விசா காலம் முடிந்த பிறகும் தங்குவதை தடுக்க 15000 அமெரிக்க டாலர்கள் வரை (ரூ.13,16,573)உத்தரவாத தொகையை செலுத்த வேண்டும் என்று வெளியுறவுத் துறை அறிவித்துள்ளது.

இந்த திட்டத்தின் கீழ் வரும் நாடுகளின் பெயர்கள் இன்னும் அறிவிக்கப்படவில்லை. குறித்த காலத்துக்குள் அமெரிக்காவில் இருந்து வெளியேறிவிட்டால் இந்த தொகை திருப்பி தரப்படும். இந்த திட்டம் 2026ம் ஆண்டு ஆகஸ்ட் 5ம் தேதி வரை அமலில் இருக்கும். (ஐ)

# காலிஸ்தான் தூதரகம் கனடாவில் திறப்பு




கனடாவின், சீக்கிய குருத்வாரா வளாகத்தில் 'காலிஸ்தான் தூதரகம்' திறக்கப்பட்டுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

நம் நாட்டின் பஞ்சாப் மாநிலத்தை தனியாக பிரித்து, காலிஸ்தான் என்ற பெயரில் தனி நாடு உருவாக்கும் நோக்கோடு செயல்படுபவர்கள் காலிஸ்தான் பயங்கரவாதிகள். இந்தியாவில் காலிஸ்தான் இயக்கம் ஒடுக்கப்பட்டதால், வட அமெரிக்க நாடான கனடா மற்றும் அமெரிக்காவில் இருந்து அதன் ஆதரவாளர்கள் செயல்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக கனடாவில் இந்த பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள், இந்தியாவுக்கு எதிராக செயல்பட்டு வருகின்றனர். ஹிந்து கோவில்கள் மீது தாக்குதல், இந்தியர்கள் மீது தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஆனால், அரசியல் லாபத்துக்காக, காலிஸ்தான் பயங்கரவாதிகள் மீது எந்த நடவடிக்கையும் கனடா அரசு எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. இந்த நிலையில், அதை மெய்ப்பிக்கும் வகையில், 'காலிஸ்தான் குடியரசு' என்று எழுதப்பட்ட பலகையுடன் கூடிய தூதரகம் ஒன்று, சர்சே பகுதியில் உள்ள குருத்வாரா வளாகத்தின் ஒரு கட்டடத்தில் திறக்கப்பட்டுள்ளது.

தூதரகம் அமைக்கப்பட்டுள்ள கட்டடம் பிரிட்டிஷ் கொலம்பியா அரசால் வழங்கப்பட்ட நிதியில் கட்டப்பட்டதாக உள்ளூர்வாசிகள் தெரிவித்தனர்.

கடந்த, 2023ல் காலிஸ்தான் பயங்கரவாதி ஹரிதீப் சிங் நிஜ்ஜார் சுட்டுக் கொல்லப்பட்ட விவகாரத்தில், அப்போதைய கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இந்தியா மீது குற்றஞ்சாட்டினார். இந்த குருத்வாராவின் தலைவராக நிஜ்ஜார் இருந்தார். (ஐ)

# மோடியுடன் பேசுவேன் டிரம்ப் உடன் பேசமாட்டேன்: வரி விதிப்பால் பிரேசில் அதிபர் காட்டம்



"அதிபர் டொனால்டு டிரம்பை அழைக்கப் போவதில்லை. அவருடன் பேச விரும்பவில்லை. அதற்கு பதிலாக பிரதமர் மோடி மற்றும் பிற நாட்டு தலைவர்களுடன் பேசுவேன்" என பிரேசில் அதிபர் லூலா டா சில்வா தெரிவித்துள்ளார்.

பிரேசில் மீது அமெரிக்கா கூடுதலாக 40ூ வரி விதித்தது. இதனால் பிரேசிலிய இறக்குமதிகள் மீதான மொத்த வரி 50ூ ஆக உயர்ந்தது. இது இருநாடுகளுக்கும் இடையே கடுமையான மோதலை ஏற்படுத்தி உள்ளது. இது தொடர்பாக, பிரேசில் அதிபர் லூலா டா சில்வா பேசியதாவது:

பிரேசில் தனது வர்த்தக நலன்களைப் பாதுகாக்க உலக வர்த்தக அமைப்பு உட்பட அனைத்து கருவிகளையும் பயன்படுத்தும். அதிபர் டொனால்டு டிரம்பை அழைக்கப் போவதில்லை. அவருடன் பேச விரும்பவில்லை. நாடுகளுக்கு இடையிலான இருதரப்பு உறவுகளில் மிகவும் வருந்தத்தக்க நாள்.

அதற்கு பதிலாக பிரதமர் மோடி மற்றும் பிற நாட்டு தலைவர்களுடன் பேசுவேன். நான் சீன அதிபர் ஜி ஜின்பிங்கை அழைப்பேன். புடினால் இப்போது பயணம் செய்ய முடியாததால் நான் அவரை அழைக்க மாட்டேன். ஆனால் நான் பல அதிபர்களுடன் பேசுவேன்.

முன்னதாக, வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக, பிரேசில் அதிபர் லூலா டா சில்வா உடன் எப்போது வேண்டுமானாலும் பேசுவேன் என அதிபர் டொனால்டு டிரம்ப் கூறியிருந்தார். பிரேசிலின் நிதியமைச்சர் பெர்னாண்டோ ஹடாட், டிரம்பின் நடவடிக்கையை வரவேற்று, அத்தகைய முடிவை எடுக்க, அதிபர் லூலா டா சில்வா தயாராக இருப்பார் என்று கூறினார்.

இருப்பினும், டிரம்புடன் உடன் பேச விரும்பவில்லை என அதிபர் லூலா டா சில்வா தனது விருப்பத்தை வெளிப்படுத்தி உள்ளார். (ஐ)

# 400 பேருடன் சிறிய நாட்டை உருவாக்கிய 20 வயது இளைஞன்



குரோஷியா -செர்பியா நாடுகளுக்கிடையே வெர்டிஸ் என்ற சிறிய நாட்டை உருவாக்கி அதற்கு நான் அதிபர் என தனக்கு தானே அறிவித்துக்கொண்ட 20 வயது ஆஸ்திரேலியா இளைஞன் இணையதளத்தில் அனைவரையும் கவர்ந்துள்ளார்.

இது குறித்து தி நியூயார்க் போஸ்ட் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்தியில், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த டேனியல் ஜாக்சன் என்ற 20 வயது இளைஞன், குரோஷியா விற்கும் செர்பியாவிற்கும் இடையிலான டானூப் ஆற்றின் குறுக்கே 125 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள உரிமை கோரப்படதாக நிலத்தை வெர்டிஸ் குடியரசு நாடாக அறிவித்து அதன் அதிபர் நான் தான் தனக்கு தானே அறிவித்துள்ளார்.

அதன் கொடி, அமைச்சரவை, நாணயம் மற்றும் 400 குடிமக்களைக் கொண்டுள்ள இந்த சிறிய நாடு, இப்போது இத்தாலியில் உள்ள வாடிகன் நகரத்திற்குப் பிறகு உலகின் இரண்டாவது சிறிய நாடாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதன் அதிகாரப்பூர்வ மொழிகள் ஆங்கிலம், குரோஷியன் மற்றும் செர்பியன் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அந்த பத்திரிக்கையில் கூறப்பட்டுள்ளது. புதிய நாட்டை உருவாக்கிய இளைஞன் இணையத்தில் அனைவரையும் கவர்ந்துள்ளான். (ஐ)

## மோட்டார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கலென்பிந்துனுவெவ பகுதியை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று செலுத்துனரின் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் கவிழ்ந்து இழுபட்டுச் சென்றதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளின் செலுத்துனரும் பின்புறத்தில் பயணித்தவரும் காயமடைந்து யக்கல்ல வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட பின்னர் இருவரும் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்கள்20, 31வயதுடையகலென்பிந்துனுவெவ மற்றும் அங்குருவாதொட்ட பகுதிகளை வசிப்பிடமாகக் கொண்ட இளைஞர்கள் என்று பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

விபத்தில் உயிரிழந்த இருவரது சடலங்களும் யக்கல்ல வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம், கலன்பிந்துனுவெவ பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## துப்பாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அரலகங்வில ரு/ஹனுகம பகுதியை சேர்ந்த 31, 34 மற்றும் 39 வயதுடையவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூவரும் குடும்பஸ்தர்கள் என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அரலகங்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## வெடி பொருள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இறக்குவானை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட மெதகங்கொட பிரதேசத்தில் வைத்து மேற்படி வயோதிபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் இறக்குவானை பகுதியில் வசிக்கும் 78 வயதுடைய வயோதிபர் ஆவார்.

அவரிடமிருந்து 2 கிலோ 888 கிராம் கோடையிட், 9 கிலோ 597 கிராம் அமோனியம், 15 வோட்டர் ஜெல் குச்சிகள், டெட்டனேட்டர் 25 மற்றும் வெடிமருந்து நூல் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனையடுத்துக் கைது செய்யப்பட்ட வயோதிபர் மேலதிக விசாரணைகளுக்காக இறக்குவானை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை இறக்குவானைப்பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.

## கைதான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2022 ஆம் ஆண்டு நாடளாவிய போராட்டங்களின் போது தீக்கிரையாக்கப்பட்ட செவனகல - கிரிப்பன் வேவ பகுதியில் உள்ள அரச நிலத்துக்கு மற்றொரு நபர் மூலம் இழப்பீடு பெற்ற சம்பவம் தொடர்பாக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ கைது செய்யப்பட்டார்.

இன்று காலை நுகேகொடையில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து அவர் கைது செய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து அவர் இலஞ்ச, ஒழிப்பு ஆணைக்குழுவில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்ட பின்னர் அவர் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்தில் இன்று பிற்பகல் ஆஜர்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# இளைஞர் வெட்டிப் படுகொலை!

நாவுல, ஓக. 06

இளைஞர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை நாவுல பொலிஸ் பிரிவின் நிகுல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் தம்புள்ளை, களுந்தாவை பகுதியைச் சேர்ந்த 23 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

தாக்குதலில் பலத்த படுகாயமடைந்த இளைஞர் நாலந்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில், பணத் தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றுள்ளது என்று தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய நிகுல பகுதியைச் சேர்ந்த 41 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் குறித்து நாவுல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதல் தொடர்பிலான வழக்கு ஒத்திவைப்பு!

*உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதல் தொடர்பிலான வழக்கு இன்று (6) கொழும்பு மேல் நீதிமன்றத்தின் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு முன் விசாரணைக்கு வந்தது.*

*உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதலுக்கு திட்டமிடல், உதவி செய்தல் மற்றும் உடந்தையாக இருந்ததாக நௌபர் மௌலவி உட்பட 24 பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, நவரட்ண மாரசிங்க, பிரதீப் அபேரத்ன மற்றும் சுஜீவ நிசங்க ஆகியோர் அடங்கிய நீதிபதிகள் குழாம் முன் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.*

*இதன்போது பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.*

*குறித்த வழக்கு தொடர்பில் பிரதிவாதி ஒருவர் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளதால், இந்த வழக்கின் சாட்சி விசாரணைகள் செப்டம்பர் 11ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.*

*உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாத தாக்குதல் தொடர்பாக நௌபர் மௌலவி உட்பட 24 பிரதிவாதிகளுக்கு எதிராக பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபர் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தார்.*

*குறித்த வழக்கில் அனைத்து பிரதிவாதிகளும் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.*

# சட்டவிரோத வணிக நடவடிக்கையில் ஈடுபடும் வெளிநாட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்– அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ உறுதி!

நாட்டுக்கு வருகை தந்து சட்டவிரோத வணிக நடவடிக்கையில் ஈடுபடும் வெளிநாட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று கொழும்பிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

இதன்போது இலங்கையில் அறுகம்பே, வெலிகம மற்றும் உனவட்டுன போன்ற பகுதிகளில் அதிகரித்துவரும் இஸ்ரேலியப் பிரஜைகளின் ஆதிக்கம் குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வாராந்தம் ஒருமுறை இஸ்ரேலியர்கள் கூடும் இடத்துக்கு பாதுகாப்பு வழங்கப்படுவதற்குக் காரணம் சுற்றுலாப்பயணிகளுக்குரிய பாதுகாப்பை அளிக்கவேண்டிய கடப்பாடு அரசாங்கத்துக்கு இருப்பதனாலேயே தவிர, வேறெந்த விசேட பாதுகாப்பும் வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டினார்.

அத்துடன் சுற்றுலாப்பயணிகளாக நாட்டுக்கு வருகைதரும் வெளிநாட்டவர்களால் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் உரிய அனுமதிபெறாமல், சட்டவிரோதமான முறையில் நடாத்தப்பட்டுவரும் வணிகங்கள் கண்டறியப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.

# குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு தவறுதலாக சென்ற சாகல ரத்நாயக்க!

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் பணிக்குழாமின் பிரதானி சாகல ரத்நாயக்க, குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு தவறுதலாக இன்று 06) காலை சென்றுள்ளார்.

நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாகுமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்ட நிலையில், தவறுதலாக குற்றப்புலனாய்வு திணைக்களத்துக்கு சென்றுள்ளார்.

பின்னர் அங்கிருந்து வெளியேறி நிதி குற்றப் புலனாய்வுப் பிரிவில் அவர் முன்னிலையாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஓகஸ்ட் 10 இல் இடம்பெறவுள்ள புலமைப்பரிசில் பரீட்சை– இன்று முதல் மேலதிக வகுப்புகளுக்கு தடை!

*தரம் 5 ஆம் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை ஓகஸ்ட் மாதம் 10ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், இன்று (06) நள்ளிரவுக்குப் பின்னர் பரீட்சை முடியும் வரை புலமைப்பரீட்சை தொடர்பான மேலதிக வகுப்புக்களை நடாத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.*

*இந்த அறிவித்தலை பரீட்சைகள் திணைக்களம் வழங்கியுள்ளது.*

*பரீட்சார்த்திகளுக்கான மேலதிக கல்வி வகுப்புகளை ஏற்பாடு செய்து நடத்துதல், பாடம் தொடர்பான விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சி பட்டறைகளை நடத்துதல் தடை செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.*

*பரீட்சைக்கான யூக கேள்விகள் அடங்கிய வினாத்தாள்களை அச்சிட்டு விநியோகித்தல், பரீட்சைக்கான வினாத்தாள்களை வழங்குவதாகவும் அல்லது அதற்கு சமமான கேள்விகளை வழங்குவதாகவும் சுவரொட்டிகள், பதாகைகள் மற்றும் துண்டுப் பிரசுரங்களை வெளியிடுதல் அல்லது மின்னணு அல்லது அச்சு ஊடகங்கள் அல்லது சமூக ஊடகங்கள் மூலம் அவற்றை வைத்திருப்பது முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது.*

*இந்த உத்தரவுகளை மீறி எந்தவொரு நபரோ அல்லது நிறுவனமோ செயல்பட்டால், அருகிலுள்ள பொலிஸ்நிலையத்திலோ அல்லது பரீட்சைகள் திணைக்களத்தின் 1911 என்ற அவசர தொலைபேசி எண்ணுக்கோ அல்லது பாடசாலை பரீட்சை அமைப்பு, முடிவுகள் கிளையிலோ 0112 784208 அல்லது 0112 784537 என்ற எண்களுக்கு அழைத்து முறையிடவும் முடியும் என பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த 4 இந்திய மீனவர்கள் கைது!

நெடுந்தீவு கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 4 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த கைது நடவடிக்கை நேற்று (05) இரவு மேற்கொள்ளப்பட்டது.

கைதுசெய்யப்பட்டவர்களின் இருந்து ஒரு மீன்பிடி படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட மீனவர்களை காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்து சென்ற கடற்படையினர், அவர்களை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர் ராஜினாமா!

அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தலைவர் பதவியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத் ராஜினாமா செய்துள்ளார்.

இன்றைய (06) நாடாளுமன்ற அமர்வில் விசேட உரை ஒன்றை ஆற்றிய போதே அவர் தனது ராஜினாமாவை அறிவித்தார்.

அரசாங்கக் கணக்குகள் குழுவின் தலைவர் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்க இணக்கம் ஏற்பட்டுள்ளதால் அதற்கு வழி வகுக்கும் வகையில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்த செனரத் குறிப்பிட்டார்.

# சமஸ்டி ஆட்சி கோரி 100நாள் போராட்டம்– கல்முனையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம்!

சமஸ்டிக் கோரிக்கையை முன்வைத்து வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பு குழு 100நாள் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளது.

அதன்படி இன்றையதினம் அம்பாறை மாவட்டம் கல்முனை பகுதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தின் போது பதாதைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தொடர்ச்சியாக வடக்கு - கிழக்கு பகுதிகளில் அரசினால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்ற நில ஆக்கிரமிப்புக்கள், மத சுதந்திர மீறல்கள், ஏனைய வன்முறைகள் இடம்பெறாமல் இருப்பதை வலியுறுத்தியும், வடக்கு - கிழக்கு மக்கள் எதிர்பார்க்கின்ற அரசியல் தீர்வான சமஸ்டி முறையிலான அரசியல் தீர்வு வேண்டும் என்பதை வலியுறுத்தியும் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.08.2025 வெளியிடப்பெற்றது.